[2011 செப்டம்பர் 14

விலைக் கடைகள்மூலம் மானிய விலையில் வழங்கப்படும் திட்டம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.6.05 கோடியாகும்.

4. இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்

இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும், தையல் பயிற்சி பெற்ற 3,778 இலங்கைத் தமிழ் பெண்களுக்கும் இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.1.13 கோடியாகும்.

5. சமூகப் பாதுகாப்புத் திட்டம்

முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற மாதாந்திர சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியமான மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் அனைத்துத் தகுதி வாய்ந்த முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

6. இலவசக் கல்வி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு மேல் நிலை வகுப்பு (பிளஸ் 2) வரையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கு சீருடைகள், மதிய உணவு, பேருந்து சலுகை, புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் மிதியுந்துகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. சராசரியாக கல்வி நிலையங்களில் 21,500 இலங்கைத் தமிழ் மாணவ, மாணவிகள் சேர்ந்துள்ளனர். மாநிலத்திலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முறையான மாணவர்கள் சேர்க்கை முடிந்த பின் ஏற்படும் காலியிடங்களில் முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் சேர்ந்து உயர்கல்வி பெற்றிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவர்கள் மேலும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையில் பொதுப் பிரிவு கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழகத்திலுள்ள பட்டதாரிகளில்லா குடும்பங்களில் ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழிற்கல்லூரிகளில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.